### த.வெ.க. அமைச்சர் – எம்.எல்.ஏ.வின் ஊழல் ஆதாரங்களை உரிய நேரத்தில் வெளிப்படுத்துவோம்!

# மக்களின் எதிர்ப்பை திசைதிருப்பவே த.வெ.க. அரசு ரெய்டு நாடகம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



**சென்னை,செப்.17-**

**த.வெ.க. அரசின் மீதான மக்களின் எதிர்ப்பை, அதிருப்தியை திசை திருப்பவே ரெய்டு நாடகம் நடைபெறுகிறது. த.வெ.க. அமைச்சரும், எம்.எல்.ஏ.வும் செய்து கொண்டுள்ள ஊழல் ஆதாரத்தை உரிய நேரத்தில் வெளிப்படுத்துவோம் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.**

**தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது.**

### ஒரே நாளில் 6 கொலைகள்!

**செய்தியாளர்கள்:-** முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் வீட்டில் சோதனை நடைபெறுகிறது. இது குறித்து என்ன கருத்து தெரிவிக்கிறீர்கள்,

**ஆர்.எஸ்.பாரதி:-** தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது, நேற்று முன்தினம் (15.09.2026) மட்டும் ஒரே நாளில் 6 படுகொலைகள் நடைபெற்றுள்ளது, நீதிமன்றத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வெளியே வந்த ஒருவரை சரமாரியாக வெட்டிக் கொன்றுள்ளார்கள். அதுமட்டுமல்ல, திருப்பதி கொடை ஊர்வலத்திற்கு பாதுகாப்பு பணியில் இருந்த பெண் போலீசாரிடம் த.வெ.க. நிர்வாகி சில்மிசத்தில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து அந்தப் பெண் போலீசும் புகார் அளித்து அதன் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டும், த.வெ.க. வை சார்ந்த ஒரு அமைச்சர் தலையிட்டத்தின் பெயரில் அந்த சில்மிச நிர்வாகி உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதுபோன்று பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத அரசாக தான் இந்த அரசு நடைபெற்று வருகிறது.

### விலைவாசி உயர்வு!

அதுமட்டுமல்ல விலைவாசி கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பிருந்ததை விட தற்பொழுது அதிக அளவு உயர்ந்துள்ளது, குறிப்பாக தி.மு.க. ஆட்சியின் போது கடந்த ஏப்ரல் மாதம் ஒரு மூட்டை அரிசியின் விலை 1600 ஆக இருந்தது தற்பொழுது 2200 ரூபாயாக உயர்ந்துள்ளது துவரம் பருப்பு ஒரு கிலோ 150 ரூபாயில் இருந்து 190 ரூபாயாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் சீரான மின்விநியோகம் இல்லாமல் இருளில் மூழ்கி போய் உள்ளது, எங்கு பார்த்தாலும் குடிநீர் திண்டாட்டம், இதையெல்லாம் சரி செய்ய முடியாத அரசு, பிரச்சனைகளை திசை திருப்பும் போக்கில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வீட்டில் ரெய்டு என்கிற பெயரில் மடைமாற்ற பார்க்கிறது,

### திசை திருப்பவே ரெய்டு நாடகம்!

தி.மு.க. வரலாற்றில், கடந்த 50 ஆண்டு காலமாக, பல்வேறு ரெய்டுகளை சந்தித்து இருக்கிறோம், எதிலும் உண்மை இல்லாத காரணத்தினால் இதுவரை எந்த குற்றமும் நிரூபிக்கப்படவில்லை.

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் 2001 ஜூன் மாதம் 30 ஆம் தேதி மேம்பாலம் கட்டியதில் ஊழல் நடைபெற்றதாக நள்ளிரவில் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டார். 25 ஆண்டுகளை கடந்தும் இன்னும் அந்த வழக்கில் உண்மை இல்லாத காரணத்தினால் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது, அதுமட்டுமல்ல தற்பொழுது இடைத் தேர்தல் நடைபெறுகிற காரணத்தினால், இந்த ஆட்சியின் மீது உள்ள தவறுகளை மூடி மறைப்பதற்காக மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக இந்த ரெய்டு நடைபெற்று வருகிறது. இதனை நாங்கள் சட்டப்படி எதிர்கொள்வோம்.

### மாற்றமல்ல; ஊழலின் நாற்றம்!

**செய்தியாளர்கள் :-** முதலமைச்சர் விஜய் நாங்களும் தப்பு செய்ய மாட்டோம் யாரு தப்பு செஞ்சாலும் விடமாட்டோம், என்று சொல்லி இருக்கும் பட்சத்தில் தாம்பரத்தில் நடைபெற்ற டெண்டர் ஊழல் பற்றி,

**ஆர்.எஸ்.பாரதி :-** மாற்றம் மாற்றம் என்று சொன்னார்கள் இதுதான் மாற்றம், ஊழலின் நாற்றம். எப்பொழுதுமே ஒரு டெண்டர் விடப்பட்டு அதன் பிறகு பணிகள் தொடங்குவது என்பது ஆங்கிலேயர் காலத்தில் இருந்து நடைமுறை, ஆனால் இந்த ஆட்சி சற்று வித்தியாசமானது, பணிகளை முடித்துவிட்டு அதன் பிறகு டெண்டர் விடுவது என்பது தாம்பரத்தில் வித்தியாசமாக நடைபெற்றுள்ளது, இதுதான் இந்த ஆட்சியின் மாற்றம் என்பது , இதனை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்,

இதுபோன்று இந்த ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்று உள்ளது, இதனை எல்லாம் எங்களது சட்டத்துறை ஆதாரத்துடன் சேகரித்து வருகிறது , உதாரணத்துக்கு இன்னொன்றை சொல்ல வேண்டும் என்றால், 12 மதுபானங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படுகின்றன, 24 மணி நேரத்தில் மீண்டும் அந்த 12 மதுபானங்களுக்கு மீண்டும் அனுமதி அளிக்கப்படுகிறது, அப்படி என்றால் இதன் பின்னணியில் நடந்தது என்ன, இதனை எல்லாம் நாங்கள் சேகரித்து வைத்து வருகிறோம், ஊழலை ஒழிக்க போவதாக சொன்ன உத்தமர் விஜய் ஆட்சியில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்று வருகின்றன, ஏன் அவரே வரி ஏய்ப்பு செய்தது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு ஒரு கோடி அபராதம் கட்ட சொன்ன வரலாறு , இதற்கு முன்னால் வருமான வரி கட்டவில்லையென சினிமா துறையில் இருந்து முதல்வர்கள் ஆன கலைஞர் அவர்களுக்கோ, எம்.ஜி.ஆருக்கோ, ஜெயலலிதாவுக்கோ எந்த நீதிமன்றமும் இது போன்ற ஒரு உத்தரவு பிறப்பித்தது கிடையாது,

**செய்தியாளர்கள் :-** முதலமைச்சர் விஜய் அவர்களின் லண்டன் பயணம் குறித்து,

**ஆர்.எஸ்.பாரதி :-** முதல்வர் விஜய் அவர்கள் தொழில் முதலீட்டை ஈர்க்க லண்டன் செல்வதாக கூறிவிட்டுச் சென்றார் , ஆனால் அவர் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாட்டு மக்களே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், அவர் தமிழ்நாடு திரும்பியதும் என்ன முதலீடுகளை ஈர்த்துக் கொண்டு வந்தார் என்பதை சொல்லும்போது மக்கள் அதனை ஆராய்ந்து பார்க்க தான் போகிறார்கள்.

**செய்தியாளர்கள் :-** பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைவதற்கு மீனவ மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்களே..?

**ஆர்.எஸ்.பாரதி :-** இந்த அரசு மக்கள் விரோத அரசு என்பதற்கு மற்றும் ஒரு எடுத்துக்காட்டு மீனவ மக்கள் அதிகம் வசிக்கின்ற பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகத்தை கட்ட எடுத்துக் வரும் நடவடிக்கை ஒன்றாகும்.

புதிய தலைமை செயலகம் கட்டவுள்ள இடத்தேர்வுக்கு மக்கள், குறிப்பாக மீனவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இது மீனவ மக்கள் அதிகம் வசிக்கும் பகுதி, கடந்த எழுபது ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலில் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்கள் தான் அப்பகுதியில் குடிசையில் இருந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார், அதன் பிறகு அதனை ஒட்டிய பகுதியில் வசித்த மீனவர்களுக்கு கலைஞர் அவர்கள் குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்.

இதையெல்லாம் கடந்த கால வரலாறு, இந்த வரலாறு தற்போது உள்ள த.வெ.க. அமைச்சர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம், ஆனால் அமைச்சரவையில் உள்ள இரண்டு காங்கிரஸ் அமைச்சர்களுக்கு எப்படி தெரியாமல் போனது என்பது தான் வேடிக்கையாக உள்ளது, உண்மையான பழைய காங்கிரஸ் காரர்களா இருந்தால் வரலாற்றை மறந்து இருக்க மாட்டார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறினார்.






மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 24 வாக்குச்சாவடிகளில் தேர்தல் களப்பணி ஆற்றுவதற்காக மாவட்ட அவசர செயற்குழு உறுப்பினர் கூட்டம் பெரிய வெளிக்காடு தோட்டத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தேர்தல் பணியாற்றுவது சம்பந்தமாக ஆலோசனைகளை வழங்கினார். அருகில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கழக வேட்பாளர் இ.பரந்தாமன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.


